

# MADURAI KAMARAJ UNIVERSITY
**(University with Potential for Excellence)**

**Palkalai Nagar, Madurai - 625 021.**

Re-accredited by NAAC with 'A++' Grade in the 4th Cycle

## TENDER NOTICE

Lr. No. 2202 /E.O/Canteen/Tender Notice/MKU/2026.

For and on behalf of Madurai Kamaraj University, the sealed tenders are invited by the Registrar, Madurai Kamaraj University, Madurai-21 for the following work from the registered contractors of any Government Departments up to 3.00 PM of 25.08.2026 which will be opened by the Registrar, Madurai Kamaraj University at his Office at 3.30 PM on the same day in the presence of the Tenderers or their agents who choose to be present at the time of opening.

| Sl.no. | Name of Work | EMD Amount | Cost of Tender Documents & GST | Caution Deposit | Period of MOU |
|---|---|---|---|---|---|
| 1. | Proposal of running the canteen on rental basis as per the conditions noted in the MKU Website. | Rs.45,000/- | Rs.5000/-+ Rs.900 (GST 18%) | Rs.2.25 Lakhs | 3 years |

| Sl.No | Period of sale | | Last Date of Received of Tenders upto 3.00 PM | Date of Tender Opening at 3.30 PM |
|---|---|---|---|---|
| | From | To | | |
| 1. | 23.07.2026 | 24.08.2026 | 25.08.2026 | 25.08.2026 |

1. The contactors should produce copy of the registration and the live certificate of registration.
2. The contractors should produce the Income tax and GST certificate for the last three years.
3. The cost of Tender schedule is non refundable.
4. The tender document will be issued after verifying all credentials of the intending tenderers and on production of the remittens of the cost of Tender Schedule in MKU A/C No.1 Challan of State Bank of India Branches Or online
5. The delay in receipt of tenders due to Postal delay or some other reasons will not be accepted.

<u>கவர் 1</u>

## மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

## பல்கலைக்கழக உணவகம் நடத்த ஒப்பந்த நிபந்தனைகள்

1. ‘‘உணவகம்’’ நடத்துவதில் தாங்கள் அரசு நிறுவனமாக இருந்தால் குறைந்தது 05 வருட கால முன் அனுபவமும் அல்லது தனியார் நிறுவனமாக இருந்தால் குறைந்தது 7 வருட கால முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்( தகுந்த சான்று இணைக்கப்பட வேண்டும்).

2. ‘‘உணவகம்’’ நடத்த தாங்கள் அரசின் உரிமம் பதிவுச்சான்று (FSSAI – Registration Certificate) பெற்றிருக்க வேண்டும்(சான்று இணைக்கப்படவேண்டும்).

3. தாங்கள் கடந்த ஆண்டிற்குண்டான GST செலுத்திய சலான் இணைக்கப்பட வேண்டும்.

4. உணவகம் நடத்துவதற்கான விண்ணப்ப படிவம் மதுரை காமராசர் பல்கலைக்கழக பொறியியல் துறையில் 23.07.2026 முதல் 24.08.2026 வரை அலுவலக நேரத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 5.30 வரை நேரில் பெற்றுக்கொள்ளலாம். அதற்குரிய விண்ணப்பக்கட்டணமாக ரூ.5,000/-(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)ஐ **“பதிவாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-21”** என்ற பெயரில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் கேட்பு வரைவோலையாகவோ அல்லது NEFT/RTGS மூலமாக மதுரை காமராசர் பல்கலைக்கழக **கணக்கு எண்:1-ல்(10143135395)** செலுத்தி அதற்குரிய GST (GST No.33AAAJMO776B12L) கட்டணமாக 18% (ரூ.900/-)ஐ ஆன்லைன் மூலம் செலுத்தி அதற்குரிய ரசீதுகளை இணைத்து விண்ணப்ப படிவத்தினை பெற்றுக்கொள்ளலாம். எக்காரணத்தை கொண்டும் விண்ணப்பபடிவக்கட்டணமாக செலுத்திய தொகை திருப்பி வழங்கப்படமாட்டாது.

5. பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் ‘‘பிணைய வைப்புத்தொகையாக’’(EMD) ரூ.45,000/-க்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் கேட்பு வரைவோலையை(Demand draft) **‘‘பதிவாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-21’’** என்ற பெயரில் பெற்று இணைத்தல் வேண்டும். பிணைய வைப்புத்தொகை(EMD) ஒப்பந்தக்காலம் முடிந்த பின் திருப்பிதரப்படும். ஒப்பந்தம் கிடைக்காத பட்சத்தில் பிணைய வைப்புத்தொகை(EMD) ஒப்பந்தம் இறுதியானபின் பெற்றுக்கொள்ளலாம்.

6. பூர்த்தி செய்யப்பட்டு மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்த புள்ளி அடங்கிய உறையும்(உறை எண்:1) மற்றும் அனைத்து விபரம் அடங்கிய உறையும்(உறை எண்:2) 25.08.2026ஆம் தேதி மாலை 3.00மணிக்குள் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் பதிவாளர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவே சமர்ப்பிக்கப்பட வேண்டும். குறித்தநேரத்திற்குப் பின்வரும் விண்ணப்பங்கள் எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பெறப்பட்ட விண்ணப்பபடிவங்கள் 25.08.2026 அன்று மாலை 3.30 மணியளவில் மதுரை காமராசர் பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

7. மூன்றாண்டு காலத்திற்கு மட்டும் ஒப்பந்தம் நிர்ணயிக்கப்படும். உணவின் தரமும், உணவகம் நடத்தும் முறையும் திருப்திகரமாக இருந்தால் ஒப்பந்த நீட்டிப்பு பற்றி பரிசிலிக்கப்படும். நீட்டிப்புத் தருவதும் தராததும் பல்கலைக்கழகத்தின் முடிவாகும். அவ்வாறு நீட்டிப்பு தரப்படுமானால் அதற்குண்டான விலை நிர்ணயம் பற்றி மதுரை காமராசர் பல்கலைக்கழகம் அச்சமயத்தில் அறிவிக்கும்.

8. ஒப்பந்தக்காலத்திற்குள் ஒப்பந்தக்காரர் தாமாக விலகிக் கொண்டால் பாதுகாப்பு வைப்புத்தொகையும் மற்றும் பிணையத்தொகையும் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

9. ஒப்பந்த காலத்தில் விதிமுறைகளை மீறும் பட்சத்தில் உணவகம் நடத்துவதற்கான அனுமதியை ரத்து செய்ய பதிவாளருக்கு அதிகாரம் உண்டு.

10. பல்கலைக்கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட இடத்தில் 470 சதுர மீட்டர் உண்டான இடத்தில் உணவகம் நடத்தப்பட வேண்டும்.

11. உணவகம் நடத்த அனுமதிக்கப்படும் கட்டிடம் நீங்கலாக உணவகத்திற்கு வேண்டிய அனைத்துப்பொருட்களையும் ஒப்பந்தக்காரரே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

12. ஒப்பந்தம் கோருகிறவர்கள் கட்டிடத்தை அலுவலக நாட்களில் பார்வையிடலாம்.

13. கட்டடத்தில் வழக்கமான பராமரிப்புப்பணிகள் ஏற்படின் நிர்வாகத்தின் ஒப்புதல் பெற்று செய்ய வேண்டும் தவிர புதிய கட்டுமானப்பணிகள் ஏதுவும் செய்யக்கூடாது.

14. ஒப்பந்தம் முடிந்து, உணவகக் கட்டடத்தைப் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கும்போது ஒப்பந்தத்தின் அடிப்படையில் உணவகப் பொறுப்பேற்ற போது கட்டடம் எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில் ஒப்படைக்க வேண்டும். கட்டடத்தில் பழுதுகள் ஏற்பட்டிருப்பின் ஒப்பந்தக்காரர் செலுத்தியுள்ள பிணைய வைப்புத்தொகை(EMD) மற்றும் பாதுகாப்பு வைப்புத்தொகை ஆகியவற்றிலிருந்து கட்டடத்தை பழுதுபார்த்து அதற்குண்டான செலவுத்தொகை போக மீததொகை இருப்பின் ஒப்பந்தக்காரருக்குத் திருப்பித்தரப்படும்.

15. உணவகத்தையும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள கழிவறையையும் தூய்மையாக வைத்திருத்தல் ஒப்பந்தக்காரரின் பொறுப்பாகும்.

16. உணவகக் கட்டடத்திற்கு வெளியே உள்ள திறந்த வெளியில் உரிய அனுமதியின்றி உணவு பரிமாறக்கூடாது.

17. பல்கலைக்கழக உணவகம் **“UNIVERSITY CANTEEN”** என்று தான் வெளியில் பெயர்ப்பலகை வைக்கப்படல் வேண்டும். உணவகக் கட்டடத்தின் உள்ளே ஒப்பந்தக்காரரின் பெயர் வைக்கப்படுதல் வேண்டும்.

18. உணவுப் பொருட்கள் சுகாதாரமான முறையில் தரமான எண்ணெயில் தயாரிக்கப்படவேண்டும்.

19. ஒப்பந்தத்தின் அடிப்படையில் உணவுப் பண்டங்களின் எடையும், விலையும் உணவு உட்கொள்வோர் பார்வைக்காகத் தெளிவான இடத்தில் பட்டியலிட்டு வைக்கப்படவேண்டும்.

20. விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விற்பனை விலைக்கு மிகாமலும் அளவு குறையாமலும் உணவுப் பண்டங்கள் சுகாதாரமான முறையில் தயாரித்து வாடிக்கையாளருக்கு பரிமாறப்பட வேண்டும். தயாரித்து வழங்கப்படும் உணவுகள் தவிர்த்து குளிர்ப்பானங்கள், பிஸ்கட்டுகள் மற்றும் இதர பொருட்கள் அனைத்தும் MRP ரேட்டில் விற்கப்படுதல் வேண்டும்.

21. பரிமாறப்படும் குடி தண்ணீர் சுத்தமாக இருத்தல் வேண்டும்.

22. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ‘அ’ முதல் ‘ஊ’ வரையில் உள்ள படிவங்களில் தயாரிக்கப்பட்டுள்ள உணவுப் பண்டங்களுக்கு விலைகள் தனித்தனியாக குறிப்பிட வேண்டும்.

23. பல்கலைக்கழகத்தின் சார்பில் நடைபெறும் விழாக்கள் மற்றும் கருத்தரங்களுக்கு உணவுப்பொருட்கள் தேவைப்படும்பொழுது ஒத்துக்கொண்ட ஒப்பந்த விலையில் உணவுப் பண்டங்கள் தயாரித்து அளிக்கப்பட வேண்டும்.

24. இட்லி, வடை (அ) பஜ்ஜி, தோசை, பூரி-கிழங்கு, சப்பாத்தி – குருமா, பொங்கல், சட்டினி மற்றும் மதியச்சாப்பாடு ஆகியவை கண்டிப்பாக தினசரி பரிமாறப்பட வேண்டும். காபி, டீ, பால் அனைத்து வேலை நாட்களிலும் பரிமாறப்பட வேண்டும்.

25. உணவகம் சனி, ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக மற்ற நாட்களில் காலை 8.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை நடத்தப்பட வேண்டும். வார விடுமுறை நாட்கள் மற்றும் அரசு விடுமுறை நாட்களில் காலை 9.00 மணி முதல் பகல் 3.00 மணி வரை தேவையைக் கருத்திற் கொண்டு உணவகத்தை நடத்த வேண்டும்.

26. மாத வாடகையாக ரூ.45,000/-ஐ பல்கலைக்கழக வாடகை கணக்கு எண்:10143137234ல் பிரதி மாதம் 5ஆம் தேதிக்குள் செலுத்தி அதற்குரிய ரசீதினை பல்கலைக்கழக பொறியியல் துறையில் ஒப்படைத்தல் வேண்டும்.

27. உணவகத்திற்குப் பயன்படுத்தப்படும் மின்கட்டணம் பல்கலைக்கழக மின்பிரிவில் குறிப்பிடப்படும் மின் அளவின் படியும் நிர்ணயிக்கப்படும் விலையின் படியும் செலுத்த வேண்டும்.

28. ஒப்பந்தம் தங்களுக்கு கிடைக்கும் பட்சத்தில் பாதுகாப்புத்தொகை(Security Deposit)-யாக ரூ.2,25,000/-க்கு **“பதிவாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-21”** என்ற பெயரில ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் கேட்பு வரைவோலை சமர்பிக்க வேண்டும்.

29. எக்காரணத்தை கொண்டும் குழந்தை தொழிலாளர்களை பணியில் அமர்த்த கூடாது.

30. உறை எண்:1ல் சொல்லப்பட்டுள்ள வரிசை எண் 1 முதல் 8 வரை அனைத்து சான்றிதழ்களின் நகல்கள் அனைத்தும் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும் தவறும் பட்சத்தில் தங்களது விண்ணப்பம் தீர்வு செய்யும் குழுவினரால் (Scrutiny Committee) நிராகரிக்கப்படும்.

31. மேற்சொன்ன அனைத்து உண்மை சான்றிதழ்களும் (Original) விலைப்புள்ளி படிவத்தினை திறக்கும் நாளில் காண்பிக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் குறையுள்ளவரின் விண்ணபப்படிவம் எந்த வித நிபந்தனையும் இல்லாமல் நிராகரிக்கபட்டதாக கருதப்படும்.

32. கவர் எண்:1 மற்றும் கவர் எண்:2 இரண்டையும் அவைகளுக்குண்டானவற்றுடன் தனித்தனியாக மற்றொரு பெரிய கவரில் வைத்து கவரின் மேல் பல்கலைக்கழக உணவக உரிமை கோரும் விண்ணப்பம் என்று கண்டிப்பாக பெயரிட்டு கொடுக்கப்பட வேண்டும்.

Sd.XXXXX

பதிவாளர் (பொ)

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்